ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1634 - 2009 දෙසැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2009.12.24**

*1634 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1858 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1862 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, சனவரி மாதம் 1 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வாத்துவ, தபால் மத்திய வீதி, கார்ட்னியா, வீலேஜில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. சுசிலா என்பவரால் 2006.06.05 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 27 கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தின் பிரகாரம் பாணந்துறை, கெஸெல்வத்த, கெமுனு மாவத்தை, இல. 5/3 கொண்ட இடத்தில் வசிக்கும் பெட்டிகிரி கோரலாகே திலகரத்ன என்பவரால் பாணந்துறை, கெஸெல்வத்த, கெமுனு மாவத்தை, இல. 5/3 இல் வசிக்கும் ஹெட்டி ஆரச்சிகே சித்ரா மாலனி என்பவருக்கு வழங்கப்பட்ட சகல அட்டோர்ணி அதிகாரங்களும் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பெட்டிகிரி கோரலாகே திலகரத்ன.

12-676

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, கந்தவலவத்த, இல. 144/82 என்னுமிடத்தில் வசிக்கும் வெல்லப்பு ஹேவகே லலிதா நாலனீ ஆகிய நான் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு வஜிரா குமுதினீ சிரிமன் இனால் 2008, மே 1 ஆந் திகதி உறுதிப்படுத்திய இல. 810 எனும் விசேட அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் என் சார்பாக இலங்கையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு காலி, தங்கெதர, ஹென்ரி பேதிரிஸ் மாவத்தை, ரீகல் பார்க் இல் இல. 361/7 இல் வசிக்கும் சமரப்புலிகே மனோஜ் சமந்த பெர்னாண்டோ ஆகிய எனது முறையான சட்ட ரீதியிலான அட்டோர்ணி தத்துவக்காரராக நியமிக்கப்பட்டிருந்தார். அது என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறிவிக்கிறேன்.

மேற்படி சமரப்புலிகே மனோஜ் சமந்த பெர்னாண்டோவுக்கு அட்டோர்ணிப்பத்திர செல்லுபடியாதல் அல்லது சட்ட ரீதியிலான நடைமுறைகள் என் சார்பாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இல்லையெனவும் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் சம்பந்தமாகவும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

வெல்லப்பு ஹேவகே லலிதா நாலனி.

12-789/1

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, கந்தவலவத்த, இல. 144/32 (30) இல் வசிக்கும் வெல்லப்பு ஹேவகே லலிதா நாலனீ ஆகிய நான் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு மங்களிக்கா ஹஸால் ஜயசுந்தரவினால் 2006, சனவரி 10 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய இல. 256 எனும் விசேட அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் என் சார்பாக இலங்கையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நுகேகொடை, பெப்பிலியான வீதி, இல. 80 1/1 இல் வசிக்கும் செல்லஹன்னெரி கலபத்திகே இசிர உபுல் சாந்த என்பவரை எனது முறையான சட்ட ரீதியான அட்டோர்ணி தத்துவக்காரராக நியமிக்கப்பட்டிருந்தார். அவ் அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் நான் இரத்துச் செய்வதாகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறிவிக்கிறேன்.

மேற்படி செல்லஹன்னேரி கலபத்திகே இசிர உபுல் சாந்தவிற்கு அட்டோர்ணித் தத்துவத்தின் செல்லுபடியாதல் அல்லது சட்ட ரீதியிலான நடைமுறை இனிமேல் இல்லை எனவும் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது விடயம் சார்பாக எந்தப் பொறுப்பும் கூறமாட்டேன் எனவும் அறிவிக்கிறேன்.

வெல்லப்பு ஹேவகே லலிதா நாலனி.

12-789/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்ட கம்பனி இணைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றோம்-

கம்பனியின் பெயர் : பிக்கிள் ஹவுஸ் புறடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 69490
இணைக்கப்பட்டுள்ள திகதி : 2009, ஒற்றோபர் 8
அலுவலக பதிவு முகவரி : இல. 10/29, இடம மாவத்தை, விஜயகுமாரதுங்க மாவத்தை, கொழும்பு 5

12-724

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய கூட்டிணைப்பு அறிவித்தல்

கம்பனியின் பெயர் : எக்லோ கன்சல்டன்ஸி சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 70131
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, நவெம்பர் 25
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 7பி, ஜய மாவத்தை, 2 ஆம் லேன், இரத்மலானை

சஹய கோர்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-650

---

## கம்பனிகள் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று கம்பனிகளும் கூட்டிணைக் கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் :-

| கம்பனியின் பெயர் | இலக்கமும் திகதியும் | பதிவுசெய்யப் பட்ட விலாசம் |
|---|---|---|
| 1. ஃகொலி கொக் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ69818 - 04.11.2009 | இல. 451/1பி, பிலியந்தல வீதி, மகரகம |

| கம்பனியின் பெயர் | இலக்கமும் திகதியும் | பதிவுசெய்யப் பட்ட விலாசம் |
|---|---|---|
| 2. நோத் குளோத் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ69889 - 13.11.2009 | லொற் 37, ஃபேஸ் 1, பியகம எக்ஸ்போட், புறொட்சீடிங்சோண், வல்கம, மல்வான |
| 3. ஃவேனிச்சர் ஃவக்றி (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ69960 - 13.11.2009 | இல. 37, லில்லி அவனியு, கொழும்பு 6 |

பணிப்பாளர் சபையின் அறிவித்தலுக்கமைய,

மன்செக் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ6),
கம்பனிகளின் செயலாளர்கள்.

இல. 6ஏ, டெஸ்சிவில்லாவ அவெனியு,
பலப்பிட்டி,
கொழும்பு 4.
தொலைபேசி இல. : 2597910/1.

12-732

---

## எமரல்ட் செய்யின்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (என் (பீவீஎஸ் 18230)

(ஒடுக்குவதன் கீழ்)

இறுதி கூட்ட அறிவித்தல்

**உறுப்பினர்கள் தன்னிச்சையாக முடிவிடுதல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331 ஆம் பிரிவின் பிரகாரம் ஒடுக்குவதன் கூட்ட இறுதிக்கணக்குகளுக்கு முன்னர் வைக்கப்படும் நோக்கத்திற்காக, எமரல்ட் செய்யின்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (என் (பீவீஎஸ்) 18230) இன் உறுப்பினர்களின் இறுதிக்கூட்டம், கொழும்பு 7, றொஸ்மீட் பிளேஸ், இல. 28 இல் 2010, சனவரி 25 ஆந் திகதியன்று பி. ப. 5.30 மணிக்கு நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

எம். எம். சீ. முத்துகல,
ஒடுக்குநர்,
எமரல்ட் செயின்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 28, றொஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7.

12-693

---

## ஹயட் ரிரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட் (பீ.வீ. 5329)

(ஒடுக்குவதன் கீழ்)

இறுதி கூட்ட அறிவித்தல்

**உறுப்பினர்கள் தன்னிச்சையாக முடிவிடுதல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331 ஆம் பிரிவின் பிரகாரம் ஒடுக்குவதன் கூட்ட இறுதிக்கணக்குகளுக்கு முன்னர் வைக்கப்படும் நோக்கத்திற்காக, ஹயட் ரிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 5324) இன் உறுப்பினர்களின் இறுதிக்கூட்டம் 2010, சனவரி 26 ஆந் திகதி பி. ப. 5.30 மணிக்கு கொழும்பு 7, றொஸ்மீட் பிளேஸ், இல. 28 இல் நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். எம். சீ. முத்துகல,
ஒடுக்குநர்,
ஹயட் ரிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 28, றொஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7.

12-694

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய, இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய, தரங்கல ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட் 2009, நவெம்பர் 16 ஆந் திகதி முதல் தனது பெயரை லிந்துல ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட் என்று மாற்றிக்கொண்டுள்ளது.

கம்பனியின் முன்னைய பெயர் : தரங்கல ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 5806
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
கம்பனியின் புதிய பெயர் : லிந்துல ஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2009, திசெம்பர் 03.

12-721

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய, கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரங்களைக் கொண்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :

கம்பனியின் பெயர் : என்இசட் கிரிக்கட் அன்ட் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 70096
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 68, முதலாவது ஒழுங்கை, இரத்மலானை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.23

பினான்ஷியல் அன்ட் பிஸ்னஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-827

## பெயர் மாற்றும் அறிவித்தல்

"கிறேட் பிறேண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி, 2009, நவெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வண்ணம் "கிறொக்கோடைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" என பெயர் மாற்றப்பட்டுள்ளதென 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னைய பெயர்* : கிறேட் பிறேண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 4005
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 28, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7
*கம்பனியின் புதிய பெயர்* : கிறொக்கோடைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பினேன்ஸியல் சேர்விசஸ் அன்ட்
கொமர்ஷியல் ஏஜென்ஸீஸ்,
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.
(கிறொக்கோடைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்)

12-736

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய கூட்டிணைப்பு அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : அக்ரிகோ ப்ளான்டேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ69911
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, நவெம்பர் 11
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 56, சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8

கம்பனியின் கட்டளை பிரகாரம்,

எஸ்ஸைன்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2678887.

12-742/4

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கொடுக்கப்படுகின்ற அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : செனொக் எவியேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம், திகதி* : பீவீ69830 ; 2009.11.05
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 03, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 02

கன்சல்டன்ஸ் அன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2009, நவெம்பர் 17.
தொலைபேசி இல. : 2689618.

12-742/2

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கொடுக்கப்படுகின்ற அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : மில்க்வின் லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்* : பீவீ3782, 2009.10.30
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம்* : இல. 459, கொழும்பு றோட், பெபிலியான, பொரலஸ்கமுவ

கன்சல்டன்ஸ் அன்ட் கோர்பரேட்
செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618.

12-742/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) விதிகளுக்கமைய, "பீபல்ஸ் லீசிங் இன்சூரன்ஸ் லிமிட்டெட்" ஐ மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 8 இற்கமைய 2009, நவெம்பர் 20 ஆந் திகதி தொடக்கம் அதன் பெயரை பீபல்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டெட் என மாற்றம் செய்துள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் புதிய பெயர்* : பீபல்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 3754
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 67, சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02

சபையின் கட்டளைப்படி,

றொஹான் பத்திரகே,
செயலாளர்.

பீபல்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
(முன்னர் பீபல்ஸ் லீசிங் இன்சூரன்ஸ் லிமிட்டெட்).

12-658

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9(1) ஆம் பிரிவிற்கமைவாக அறிவித்தல்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009.11.04
*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட கொஸ்மெடிக்ஸ் நசுறல் (தனியார்) நிறுவனம்

கம்பனியின் இலக்கம் : பீவீ69808
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 133/4-ஏ, பாகொட வீதி, கோட்டே

வரையறுக்கப்பட்ட எல்எம் மனேஜ்மென்ட்
சேவிசர்ஸ் (தனியார்) நிறுவனம்,
செயலாளர்கள்.

12-734

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவிற்கமைவாக அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.11.04
கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பட்ட எக்ஸ்ப்ளோ வகேஸன்ஸ் (தனியார்) நிறுவனம்
கம்பனியின் இலக்கம் : பீவீ69807
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 100, பியதாச சிறிசேன மாவத்தை, கொழும்பு 6

வரையறுக்கப்பட்ட எல். எம். மனேஜ்மென்ட்
சேவிசர்ஸ் (தனியார்) நிறுவனம்,
செயலாளர்கள்.

12-735

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவிற்கமைவாக அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.10.28
கம்பனியின் பெயர் : அவிற் சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ69698
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 113/2, கிறீண்ட்லட்ஸ் காடின், இசிபத்தான மாவத்தை ஊடாக, கொழும்பு 05

வரையறுக்கப்பட்ட எல். எம். மனேஜ்மென்ட்
சேவிசர்ஸ் (தனியார்) நிறுவனம்,
செயலாளர்கள்.

12-733

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 ஆம் விதிகளின் பிரகாரம் கீழே தரப்பட்டிருக்கும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. விபரம் பின்வருமாறு :-

கம்பனியின் பெயர் : எக்ஸ்ட்ரீம் வெப் (பிறை.) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 69910
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 11, கெசியா அவெனியூ, இரத்மலானை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 23.11.2009

சபையின் கட்டளைப்படி,

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கோர்ப்பறேட் செக்கரட்டரீஸ்.

12-826

---

**அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

வெல்லம்பிட்டிய, கோத்தமி மாவத்தை, இல. 38 ஐச் சேர்ந்த முஹம்மத் சுலைமான் பாத்திமா சாமிளா ஆகிய என்னால் கொழும்பு 12, அப்துல் ஹமீத் வீதி, இல. ஏ/1/4 ஐச் சேர்ந்த கமால்டீன் பாத்திமா பஸ்மிலா என்பவருக்கு கொழும்பு நொத்தாரிசு எம். ஐ. எப் முபாரக் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2006, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட 3122 ஆம் இலக்க அட்டோர்ணி அதிகாரப்பத்திரம் இந்தத் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளது என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மேற்கூறப்பட்ட அட்டோர்ணி அதிகாரப்பத்திர இல. 3122 இன்கீழ் மேற்கூறப்பட்ட கமால்தீன் பாத்திமா பஸ்மிலா (வழங்கப்பட்டவர்) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயற்பாடுகள் அல்லது தவிர்ப்புகளுக்கு நான் பொறுப்பாளியல்ல என்பதை மேலும் குறிப்பிடுகின்றேன்.

முஹம்மத் சுலைமான் பாத்திமா சாமிலா (வழங்கியவர்).

12-825

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ், கீழ்க்காணும் கம்பனி கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஆஷ்லி ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, நவெம்பர் 16
கம்பனியின் இலக்கம் : பீவீ69950
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 474/4, காலி வீதி, கொழும்பு 03

எக்கௌண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

12-675

### அறிவித்தல்

*பதிவுசெய்யப்படாத ஆனால் அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸில் பதியப்பட்டதுமான 2003, ஓகத்து 22 ஆந் திகதி கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தை இல்லாதொழித்தலின் விடயத்தில்*

### இரத்துச்செய்தல்

*முன்னர் 32, லென்னொக்ஸ் ஸ்ட்ரீட், டூன்கப்பீ 2146, நிவ் சவுத் வேல்ஸ், அவுஸ்திரேலியா என்னும் முகவரியையும் தற்பொழுது இல. 73/50, ஸ்ரீ சரணங்கர பிளேஸ், கொஹுவல, தெஹிவளை என்னும் முகவரியையும் சேர்ந்த மேரி ஜொய்ஸ் பொக்ஸ் ஆகிய கிறிஸ்தவ மதத்தினனாகிய நான் சத்தியம்செய்து வெளிப்படுத்துவதாவது,*

1. *நான், அவுஸ்திரேலியாவில் எனது அலுவல்களையும் ஆதனத்தையும் முகாமைசெய்தல் தொடர்பில் எனது உண்மையான, சட்டபூர்வமான அட்டோர்ணித் தத்துவக்காரராக 19'ஒ கொன்னெல் ஸ்ட்ரீட், சிட்னி, அவுஸ்திரேலியா என்னும் முகவரியைச் சேர்ந்த நியூ சவுத் வேல்ஸ் நகரின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை லெவல்-3, 60 மெக்கீயூரி, ஸ்ட்ரீட், பாரமட்ட என்னும் முகவரியைச் சேர்ந்த சொலிசிட்டர் என்தனி சட்டன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, ஓகத்து 22 ஆந் திகதிய அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் நியமித் திருந்தேன்.*
2. *சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவம் அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸில் பதியப்பட்டது.*
3. *சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவம் இப்பொழுது இல்லாதொழிக்கப்பட்டும் இரத்துச்செய்யப்பட்டுமுள்ளது.*

*மேற்போந்த சத்தியக்கடதாசி இதன்கண் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துநரால் முறையாக வாசிக்கப்பட்டு இதன்கண் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துநரால் எனது முன்னிலையில் 2007, நவெம்பர் இருபத்துநாலாம் திகதியாகிய இன்று தெஹிவளையில் சத்தியம் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டது.*

*சாட்சி :*
*மேரி அனிற்றா பிரான்சிஸ்கா பெரேரா.*
*இல. 44/8, முதலாம் ஒழுங்கை, கிராமோதய மாவத்தை, தளபத்பிட்டிய, மாதிவெல.*

*ஒப்பம் :*
*மேரி ஜொய்ஸ் பொக்ஸ் (வெளிப்படுத்துநரின் கையொப்பம்).*
*எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.*
*சத்தியப்பிரமாண ஆணையாளர்/சமாதான நீதவான்.*

*12-790*

---

## ஏல விற்பனைகள்

### இலங்கை பொலிஸ் திணைக்களம்

*உத்தியோகபூர்வ நாய்கள் பிரசித்த ஏலவிற்பனை*

*இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான சேவையிலிருந்து நீக்கப்பட்ட 7 உத்தியோகபூர்வ நாய்கள் 2010.01.02 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு அஸ்கிரிய பொலிஸ் உத்தியோகபூர்வ மிருக தலைமை நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும்.*

*இவ்வுத்தியோகபூர்வ நாய்களை 2010.01.02 ஆந் திகதி காலை 8.00 மணிவரை பரீட்சித்துப் பார்க்க முடியுமென அறியத்தருகின்றேன்.*

| இனம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) ஜெர்மன் சொபட் | 04 | | 04 |
| (2) டொபர்மன் பின்சர் | 01 | 01 | 02 |
| (3) டப்ரடோ ரிட்ரீவர் | | 01 | 01 |
| | 05 | 02 | 07 |

*12-649*

---

### செலான் வங்கி பீ.எல்.சீ. – பொரளஸ்கமுவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த பல்லேபத்துவிலுள்ள ஹெட்டிகம கிராமத்தில் தெல்ஹகலன்ட, அலும்போஹகாவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. எஸ். அலககோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.06.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 603 (துண்டு எக்ஸ் என குறிப்பிடப்பட்ட நிலவரைபட இல. 603) இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு xi என அடையாளமிடப்பட்ட பிரித்து அறியப்பட்டுள்ள சகல காணித் துண்டுகளும் அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 603 இற்கமைய பதினொன்று தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.60பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் கல்கிஸ்ஸை காணிப்பதிவக அலுவலகத்தில் பரிமாணம்/பக்கம் எம்2176/246 இல் பதியப்பட்டுள்ளது.***

***வழிஉரிமை மீதும் கீழும் அத்துடன் அதனூடாகவும் :-***

***குறிப்பிடப்பட்டுள்ள துண்டு எக்ஸ்2 என அடையாளமிடப்பட்ட பிரித்து அறியப்பட்டுள்ள சகல காணித்துண்டு (வீதி ஒதுக்காக 2.5 அடி அகலம் ஒதுக்கப்பட்டுள்ளது) (மேலே கூறப்பட்ட துண்டு எக்ஸ் நிலவரைபட இல. 603 இற்கமைய பிரிக்கப்பட்டுள்ளது) இதற்கமைய சைபர் தசம் நாலு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 0.40பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் கல்கிஸ்ஸை காணிப்பதிவக அலுவலகத்தில் பரிமாணம்/பக்கம் எம்2176/247 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

**ஏல விற்பனை**

*("கடன்பட்டோர்" என்ற வகையில் பொரளஸ்கமுவைச் சேர்ந்த பேதுரு மெரன்னகே ரன்சித் மற்றும் தேமாதுர சிறியானி என்பவர்களுக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

*மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2010, சனவரி 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***காணியைச் சென்றடைகின்ற விதம்.-*** *பிலியந்தலை நகரத்திலிருந்து மொரட்டுவை வீதி மார்க்கமாக 1.6 கி. மீ. சென்று சென். மைக்கல் வீதியினூடாக 800 மீற்றர் சென்று வலதுபுறமாக அமைந்துள்ள ஹெட்டிஹம யட்டியான வீதியினூடாக 300 மீற்றர் சென்று வலதுபுறமாக*

அமைந்துள்ள 10 அடி அகலமான மோட்டார் வாகனம் செல்லக்கூடிய கிரவல் வீதியினூடாக 25 மீற்றர் சென்றால் குறிப்பிட்ட காணியை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.10.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.09.28 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2009.10.06 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி, ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

12-761

---

## செலான் வங்கி பீ.எல்.சீ. – ஜா-எல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அலுத்கோரளை ராகம்பத்துவிலுள்ள ஜா-எல நகரசபை எல்லைக்குட்பட்ட கனுவாவவில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 74, நீர்கொழும்பு வீதியில் மகுலாகஹவத்த என்று அழைக்கப்படும் காணி அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. எட்வேட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.04.04 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 461 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 2 என அடையாளமிடப்பட்ட பிரித்து அறியப்பட்டுள்ள சகல காணித்துண்டுகளும் அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 461 இற்கமைய பதின்மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவக அலுவலகத்தில் பரிமாணம்/பக்கம் எச் 47/219, எச் 47/251 மற்றும் எச் 47/239 இல் பதியப்பட்டுள்ளது.**

### ஏல விற்பனை

*("கடன்பட்டோர்" என்ற வகையில் ஜா-எலயைச் சேர்ந்த பட்டினிகுட்டிகே யோசவ் லேனாட் நோனிஸ் என்பவருக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2010, சனவரி 19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி மார்க்கமாக ஜா-எல பாலத்தைத் தாண்டிச் செல்லும்போது வரும் பஸார் பகுதியில் வலதுகை பக்கமாக உள்ள வூட் சிட்டிக்கு எதிர்புறமாக மேற்குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.06.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.06.05 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் மற்றும் 2009.06.06 ஆந் திகதிய "லங்காதீப" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி, ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456276, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

12-763

**செலான் வங்கி பீ.எல்.சீ. – கொட்டாவ கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***தென் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை பல்லேபத்து, கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவித்தார கிராமத்தில் அமைந்துள்ள தவட்டபஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஏ 1 அனுமதிபெற்ற நிலஅளவை யாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப் பட்ட 2005.08.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 897 துண்டு ஏ 1 (நிலவரைபட இல. 3125 இல் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973.12.29 ஆந் திகதியிடப்பட்டு பாணந்துறை மாவட்ட பிரிவில் வழக்கு மூலம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது) குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள் அனைத்துடனும் அத்துடன் மேற்கூறப்பட்ட காணித்துண்டு மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 897 இற்கமைய ஒரு றூட் மற்றும் நாலு தசம் நாலு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 4.45பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***தென் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை பல்லேபத்து, கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவித்தார கிராமத்தில் அமைந்துள்ள தவட்டபஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஏ 2 அனுமதிபெற்ற நிலஅளவை யாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005.08.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 897 துண்டு ஏ 2 (நிலவரைபட இல. 3125 இல் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973.12.29 ஆந் திகதியிடப்பட்டு பாணந்துறை மாவட்ட பிரிவில் வழக்கு மூலம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது) குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணித்துண்டு அங்கு காணப்படு கின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள் அனைத்துடனும் அத்துடன் மேற்கூறப்பட்ட காணித்துண்டு மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 897 இற்கமைய சைபர் தசம் ஒன்பது ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 0.91பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

மேலே கூறப்பட்ட துண்டு 1, துண்டு 2 என பிரிக்கப்பட்ட பகுதிகளாவன-

***தென் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை பல்லேபத்து, கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவித்தார கிராமத்தில் அமைந்துள்ள தவட்டபஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஏ அனுமதிபெற்ற நிலஅளவை யாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973.12.29 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3125 துண்டு ஏ என குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள் அனைத்துடனும் அத்துடன் மேற்கூறப்பட்ட காணித்துண்டு ஒரு றூட் ஐந்து தசம் மூன்று ஆறு பேர்ச் (0ஏ. 1றூ. 5.36பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***பின்வரும் காணிக்கு உரிய வழிமுறையில் பின்வருமாறு உரித்தாக்கப்பட்டுள்ளது -***

***தென் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை பல்லேபத்து, கெஸ்பாவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவித்தார கிராமத்தில் அமைந்துள்ள தவட்டபஹாவத்த என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு டி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973.12.29 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3125 துண்டு டி என குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள் அனைத்துடனும் அத்துடன் மேற்கூறப்பட்ட காணித்துண்டு ஒரு றூட் ஐந்து தசம் மூன்று ஆறு பேர்ச் (0ஏ. 1றூ. 5.36பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

**ஏல விற்பனை**

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் பிலியந்தலையில் பதிவு இல. என்(பீவீஎஸ்) 41940 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய மெஸஸ் சுப்பாகொம் கொம்பியூட்டர் சிஸ்டம் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2010, சனவரி 13 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வுள்ளேன்.

***காணியைச் சென்றடைகின்ற விதம்.***- *மிரிஸ்வத்த சந்தியிலிருந்து பிலியந்தலை வீதி மார்க்கமாக 3/4 மைல் தூரம் சென்று மாவிட்டார சந்தியின் இடதுபுறமாக உள்ள மகரகம-பிலியந்தலை வீதி மார்க்கமாக 200 யார் சென்றால் குறிக்கப்பட்ட காணி இந்த வீதியின் முன்பக்கத்தில் அமைந்துள்ளது.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2009.08.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.08.17 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2009.08.27 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.*

***கட்டணம் செலுத்தும் முறை.***- *வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகாரசபை வரி விதிகளுக்கமைய (ஒரு வீதம்) 1% உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும் ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.*

*காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''உதவி பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில்*

பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 2696155, 2572940 மற்றும் 060-2068185.

12-762

---

## செலான் வங்கி பீ.எல்.சீ. – அபிவிருத்தி வங்கிப் பிரிவு

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த பல்லேபத்துவில் கொழும்பு மாநகரசபை நிருவாக எல்லைக்குட்பட்ட வெள்ளவத்தை தெற்கு, வோர்ட் இல. 47 இல் ஈ. எஸ். பெர்ணான்டோ மாவத்தை (முன்னர் ஸ்கூல் அவனியூ என அழைக்கப்பட்டது) வரிமதிப்பீட்டு இல. 32 ஐக் கொண்டுள்ள இறுதி பரிமாணம் 122 பக்கம் 31 பரிமாணம் 38 பக்கம் 251 இல் வெள்ளவத்தை பதிவு நிலவரைபட இல. 2 இல் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீள அளவீடு செய்யப்பட்டது என்ற முறையில் துண்டு 5121 என குறிப்பிடப்பட்ட கட்டிடம் மற்றும் பெருந்தோட்டம் சகிதம் "முஹாம்திரம்ஸ் காணி" என்றழைக்கப்படுகின்ற சகல காணிகளும் அத்துடன் மேற்கூறப்பட்ட துண்டு 5121 அனுமதிபெற்ற நிலஅளவையாளர் மற்றும் மட்டுப்படுத்துவோராகிய பி. பரராசசேகரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.08.05 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1013 இற்கமைய பதினொரு தசம் ஆறு எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 11.68பே.) அல்லது 0.02954 ஹெக்டயர்-295.4 சதுர மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் (கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Well 157/56 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

### ஏல விற்பனை

*("கடன்பட்டோர்" என்ற வகையில் கொழும்பு 6 ஐச் சேர்ந்த ராமலிங்கம் பாலசுப்பிரமணியம் மற்றும் பாலசுப்பிரமணியம் சத்யராம் ஆகியயோருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்ட காணியை அதே இடத்தில் 2010, சனவரி 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- கொழும்பிலிருந்து காலி வீதியில் வெள்ளவத்தை வரை சுமார் நான்கு மைல்கள் தூரம் சென்று (இது இருநோக்கு சரக்கு போக்குவரத்து வழியாகும்) ஈ. எஸ். பெர்ணான்டோ மாவத்தைக்கு இடதுபுறமாகத் திரும்பி குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு சுமார் 150 யார் பிரயாணம் செய்யவும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.10.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008.09.20 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2008.09.17 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "உதவி பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 2696155, 2572940 மற்றும் 011-3068185.

12-839

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 0025 1000 2450 - ஃபுஜி லங்கா பிளாஸ்டிக் இண்டஸ்ரீஸ்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ.

பணிப்பாளர் சபையினால் 2009, மாச்சு 13 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.11.27 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.11.18 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு இலட்சத்து தொண்ணூற்றுமூவாயிரத்து இருநூற்றுஎழுபத்துநான்கு ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூ. 2,93,274.73) 2009, சனவரி 07 ஆந் திகதி முதல் இல. 1110 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 2,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்துநான்கு வீதம் (24%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட இல. 1110 இன் ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி பி.ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் வாரியபொல தற்போது தொலே வீதி அமைந்த வாரியபொல குரூப் இன் அக்கரமல்லிப் பிரிவு என அழைக்கப்படும் காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. தொலொஸ்வல வினால் தயாரிக்கப்பட்ட இல. 3278 எனும் வரைபடத்தில் லொட் 10 இன் ஒருபகுதியாக அமைந்துள்ள பகுதி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எச். எம். ரீ. ஆர். விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 186 எனும் வரைபடத்தில் லொட் 1 மாற்றீடு செய்யப்பட்டதாகும் (Super Seded) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. போகஹாபிட்டிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, யூன் 07 ஆம் திகதியிடப்பட்ட இல. 1165 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து நிர்ணயிக்கப்பட்டு லொட் 09 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கிற்கு : வரைபட இல. 1165 இல் லொட் 12 ஐ அடையும் 15 அடி அகல வீதி; கிழக்கிற்கு: வரைபட இல. 1165 இல் லொட் 10 ; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். ரீ. ஆர். விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 186 வரைபடத்தில் லொட் 4 ; மேற்கிற்கு : மேற்கூறப்பட்ட இல. 1165 வரைபடத்தில் லொட்கள் 7 மற்றும் 8 இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8பே.) அல்லது 0.202 ஹெக்டேயர்கள் அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்து நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட வரைபட இல. 1165 இற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 112/244 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-854/ 2

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

#### சொத்துக்கள், நிலமனைகள் ஏலவிற்பனை

கணக்கு இல. 1007 5012 4466 – ஆர். எம். யூ. ரத்நாயக்க மற்றும் ஏ. எம். ஐ. பீ. அத்தநாயக்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.12.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.11.06 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.10.22 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து இருநூற்றிருபத்துநான்கு ரூபா பதினொரு சதம் (ரூ. 4,98,224.11) இலான கட்டணத்துடன் 2008, ஓகத்து 04 ஆந் திகதி முதல் அடகுப் பிணை உறுதியான இல. 8462 இன் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும்வரை ஒரு இலட்சத்து முப்பத்துமூவாயிரம் ரூபா (ரூ. 1,33,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தைந்து வீதம் (25%) வருமதியாகவுள்ள வட்டியையும் சேர்த்து விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் மற்றும் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக கூறப்பட்ட அடகுப்பிணை இல. 8462 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், நுவரஎலிய மாவட்டம், நுவரஎலிய நகரசபை எல்லைகளுக்குள் நுவரஎலிய நகரத்தில் நுவரஎலியவின் குயின் எலிசபெத் டிரைவ் இல் அமைந்த 'சென் எட்வார்ட்ஸ் பங்களா' என்றழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ. என். பி. விஜேவீர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1993, மார்ச் 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2016 இல் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. டி. வெண்டன் டிரிசென் என்பவரால் தயாரிக்கப்பட்டு 1951, திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 19/1951 இல் லொட் பி2 என காட்டப்பட்ட பகுதி) அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன – வடக்கிற்கு : லொட் 1 ; கிழக்கிற்கு: வரைபட இல. 10 இல் லொட் பி5 ; தெற்கிற்கு : வரைபட இல. 19/1951 இன் லொட் வை ; மற்றும் மேற்கிற்கு : வரைபட இல. 19/1951 இன் லொட் சி என்பவற்றை எல்லைகளாகக் கொண்ட காணி விஸ்தீரணம் ஆறு தசம் இரண்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.20பே.) அத்துடன் அங்கு அமைந்த அனைத்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் அனைத்து பாதை உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், வீதி உட்பிரவேசங்கள், இரண்டாந்தர வழி உரிமைகள் அதனுடன் சம்பந்தப்பட்ட கிளைகளுடன் கூறப்பட்ட வரைபட இல. 2016 இற்கு அமைவாக நுவர எலிய காணிப்

பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 37/ 138 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பீ. ரூபசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993, ஓகத்து 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1121 இற்கு அமைவாக மேலே விபரிக்கப்பட்ட லொட் 2 இன் அண்மைய அளவீடு கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது. நுவர எலியவில் அமைந்த சென் எட்வர்ட் பங்களா என்றழைக்கப்படும் (கூறப்பட்ட வரைபட இல. 19/1951 இல. லொட் பி2 எனக் குறிப்பிடப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பீ. ரூபசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்ட 1993, ஓகத்து 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1121 அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 1 மற்றும் 6 ; கிழக்கிற்கு : லொட் 4 ; தெற்கிற்கு : வரைபட இல. 19/1951 இல் லொட் வை இன் ஒரு பகுதி; மேற்கிற்கு : வரைபட இல. 19/1951 இன் லொட் சி. இவற்றை எல்லைகளாகக் கொண்ட காணி விஸ்தீரணம் ஏழு பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 7பே.). கூறப்பட்ட வரைபட இல. 1121 இற்கு அமைவானதாகும்.

பின்வரும் பாதை ஒதுக்கங்களின் மீதும் ஊடாகவும் பொதுவாக பாவிப்பதற்கான ஏனைய உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள்:-

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பீ. ரூபசிங்ஹவினால் தயாரிக்கப்பட்டு 1974, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 10 இல் லொட் பி3 (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) என குறிப்பிடப்பட்ட பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பீ. ரூபசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993, ஓகத்து 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1121 இல் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6 (பாதைக்கான ஒதுக்கம்) என குறிப்பிடப்பட்ட காணித்துண்டு.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-854/ 1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 0007 1001 7182 – ஸ்ட்டார் ட்ரேடர்ஸ்

